2013 மே 8]

437—

குடமுழுக்கு

***17610—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, உடையார்குடியில் உள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலைப் புனரமைத்து குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தமிழகத்திலே உள்ள திருக்கோயில்களுக்கெல்லாம் நிதியினை வாரி வழங்கி, ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை குடமுழுக்கு நடத்தப்பட வேண்டும் என்ற ஆகம விதிப்படி நடத்துவதற்கு ஆணையிட்ட (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி மாண்புமிகு உறுப்பினர் இந்தக் கேள்வியைத் தொடுக்கும் முன்னரே, கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம், உடையார்குடி, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் குடமுழுக்கிற்காகவும், அலங்கார மண்டபம் கட்டும் பணிக்காகவும் ரூபாய் 3.5 இலட்சமும், மூன்று நிலை இராஜகோபுரம் பழுதுபார்த்துப் புதுப்பிக்கும் பணிக்காக ரூபாய் 2.70 இலட்சமும், ஆஞ்சநேயர் சன்னதி, சாஸ்தா சன்னதி, துர்க்கை அம்மன் சன்னதி, பச்சையம்மன் சன்னதி, அம்மன் சன்னதி மற்றும் நவக்கிரக சன்னதி ஆகியவற்றைப் பழுதுபார்த்துப் புதுப்பிக்கும் பணிக்கு ரூபாய் 4.04 இலட்சமும், ஆக மொத்தம் ரூபாய் 10.24 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயிலினுடைய திருப்பணிகள் எல்லாம் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

[2013 மே 8

இத்திருக்கோயிலுக்கு குடமுழுக்கு விழா மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய பொற்கால ஆட்சியில் வரும் 3–6–2013 அன்று மிகச் சிறப்பாக நடத்தப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பைப் பொழியும் அம்பிகையாக, அன்னதானத் திட்டம் தந்த அன்னபூரணியாக, கல்விக் கண் திறந்திட்ட கலைவாணியாக, (மேசையைத் தட்டும் ஒலி) புவியை ஆளப் பிறந்திட்ட புவனேஸ்வரியாக, ஈகைக் குணம் கொண்டு ஏழைகளைக் காக்கின்ற ஈசானியாக, நாளை பாரதத்தை ஆளப் போகின்ற பராசக்தியாக விளங்குகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாட்சிமை பொருந்திய தமிழ்நாட்டின் முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மலர்ப் பாதங்களைப் பணிவோடு வணங்குகிறேன். கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவில் பேரூராட்சியில், உடையார்குடியில் அமைந்துள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் குடமுழுக்கிற்கு தாயுள்ளத்தோடு ரூபாய் 10 இலட்சத்து 24 ஆயிரத்தை வழங்கி, 3–6–2013 அன்று குடமுழுக்கு நடத்துவதற்கு உத்தரவிட்ட, வாழும் வள்ளலாக விளங்குகிற, தமிழகத்திலே இருக்கக்கூடிய ஆலயங்களிலெல்லாம் குடமுழுக்கு நடத்திக் காட்டுகிற வல்லமை பொருந்திய, எங்களை வாழ வைக்கின்ற எங்கள் குல தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தொகுதி மக்களுடைய சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.*

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதியிலுள்ள ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சியில் அமைந்திருக்கின்ற அருள்மிகு பிரஹன்நாயகி உடனுறை நித்தீஸ்வரர் ஆலயம் மிகவும் பழமை வாய்ந்த ஆலயம். முதலாம் குலோத்துங்க சோழனால் கட்டப்பட்ட ஆலயம். 70 ஆண்டுகளுக்கு முன்பாக குடமுழுக்கு நடத்தப்பட்டு, இன்றுவரை குடமுழுக்கு நடத்தப்படாமல் தொல்லியல் ஆய்வுத் துறையின் பராமரிப்பிலே இருக்கக்கூடிய அந்தப் பேராலயத்தை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய கருணைப் பார்வைக்கு

எடுத்துச் சென்று, குடமுழுக்கு நடத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திருக்கோயில் மத்திய அரசினுடைய தொல்லியல் ஆராய்ச்சித் துறையின் கட்டுப்பாட்டில் இருப்பதால், அதனுடைய அனுமதியைப் பெற்று, அதனுடைய புனரமைப்பு வேலைகளைச் செய்து, குடமுழுக்கு செய்வதற்கு ஆவன செய்யப்படும் எனத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினா தொடுக்கும் முன்பே விடைகளை வழங்கி, அந்தப் பேராலயத்திற்கும் குடமுழுக்கு நடத்தப்படும் என்ற உத்தரவாதத்தைத் தந்த நாடு போற்றும் நற்றமிழ் முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்து அமர்கிறேன், வணக்கம்.

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 438, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

438—

வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்

***5208—திரு. செ. காமராஜ்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS